தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 2, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 பிப்ரவரி 14, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்றிருப்பதும், எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பதும்தான் "தவம்" என்று கூறப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

திண்காரைச் சுவர்

***92955—திரு. S. சேகர்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜேடர்பாளையத்திலிருந்து இராஜா வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களின் இரு பக்கம் திண்காரைச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2024 பிப்ரவரி 14

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராஜா வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களில் இருபுறமும் concrete அமைக்கும் பணியானது, நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல்–ERM திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அன்னார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எங்கள் கட்சியினுடைய கொறடா, மாவட்டத்தினுடைய முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த இராஜா வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் போன்ற வாய்க்கால்களைப் புதுப்பிக்க வேண்டுமென்ற விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று, கடந்த ஆட்சியிலே 184 கோடி ரூபாய் எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, அதில் 33 கிலோ மீட்டருக்கு பணி முடிக்கப்பட்டுள்ளது. இராஜா வாய்க்கால் மொத்தம் 33 கிலோ மீட்டர். இதில் 11.73 கிலோ மீட்டருக்கு மட்டும்தான் பணி செய்யப்பட்டுள்ளது. மீதி இன்னும் சுமார் 21 கிலோ மீட்டருக்கு பணி முடிக்கப்படவில்லை. அதேபோல, பொய்யேரி வாய்க்கால் 5.19 கிலோ மீட்டர். அந்தப் பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது. குமாரபாளையம் வாய்க்கால் 17.40 கிலோ மீட்டர். அதில் 5.0 கிலோ மீட்டருக்கு பணி முடிக்கப்பட்டுவிட்டது. இன்னும் 12.35 கிலோ மீட்டருக்கு பணி மேற்கொள்ளப்படவேண்டும். மோகனூர் வாய்க்காலில்

2024 பிப்ரவரி 14]

22.54 கிலோ மீட்டருக்கு 17.25 கிலோ மீட்டர் பணி முடிக்கப்பட்டுள்ளது. அதில், 5.25 கிலோ மீட்டர் அளவிற்கு பணி மீதமுள்ளது. மொத்தம் 3 வாய்க்கால்களையும் சேர்த்து சுமார் 39 கிலோ மீட்டர் அளவிற்கு பணிகள் மீதமுள்ளன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மீதமுள்ள பணிகளை எப்போது முடித்துக்கொடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல், இந்தப் பணிகள் முடிந்திருக்கின்றன. இப்போது கொஞ்சம் சேமிப்பு வந்திருக்கிறது. அந்தச் சேமிப்பை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தப் பணிகள் முடிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சேகர் அவர்கள்.*

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சை புகளூர் தடுப்பணைத் திட்டம் கடந்த ஆட்சியிலே 406 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அப்பணிகளில் மோகனூர் வாய்க்காலுக்குச் செல்லும் வழியில் உள்ள* concrete *சுவரானது உயரமாக உள்ளது. ஆகவே, மோகனூர் வாய்க்காலுக்குச் செல்வதற்கு, ஒன்று, அந்த* concrete-*சுவரினுடைய உயரத்தைக் குறைக்கவோ, இல்லையென்றால் 50 மீட்டர் தள்ளி மதகு அமைக்கவோ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, மோகனூர் வாய்க்காலுக்கு திருமணிமுத்தாறிலிருந்து வரக்கூடிய நீரினால் வெள்ளப்பெருக்கு வரும் காலகட்டத்திலே கரை உடைகிறது. எனவே, காவேரியில் கலக்கும் இடத்திலே ஒரு balancing weir *அமைக்க அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு கவனத்தில்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2559—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்யும்பொழுது, திருப்பத்தூரை ஒட்டியுள்ள ஊராட்சிகள், நகராட்சியுடன் இணைக்கப்பட்டு, வார்டுகளின் எண்ணிக்கை 31-லிருந்து 36-ஆக உயர்த்தப்பட்டது. எனவே, குடிநீர்த் தேவை கணக்கீட்டின்படி ஏற்கெனவே நகராட்சிப் பகுதியாக இருந்த 31 வார்டுகளுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் 5.84 MLD *காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது.*

மேலும், திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊரகப் பகுதிகளைச் சார்ந்த வார்டுகளுக்கும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம், அனைத்து வார்டுகளும் பயன்பெறும்வகையில், காவிரி குடிநீர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை வழங்கப்பட்டு, நகராட்சி மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.